பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 மார்கழி 7 முஹறம் 10 இதழ் 312
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22-12-77

## ★ ஏரியில் கண்டுபிடிக்கப்பட்ட பேராசிரியரின் சடலம்!

வாஷிங்டன், டிச 21

அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் பணியாற்றும் சென்னை பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆர் ராமதாஸ், மர்மமான முறையில் இன்று இறந்துகிடக்கக் காணப்பட்டார். அவரது சடலம் (இங்குள்ள) இயாட்டிலுள்ள ஏரியொன்றில் மிதந்துவரக் கண்டுபிடிக்கப்பட்டது!

இங்குள்ள பல்கலைக்கழகமொன்றில் பணிபுரிந்த இப்பேராசிரியர் கடந்தமாதம் 23ந் திகதி திடீரெனக் காணமற் போய்விட்டார். தேடும் முயற்சிகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டும், எந்தவித பலனும் அளிக்கவில்லை. இன்று காலை இவரது சடலம் ஏரியில் மிதந்துவந்ததைத் தாம் கண்டதாக அவரது புதல்வி (பல்கலைக்கழக மாணவி] செல்வி ரமா ராமதாஸ் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து மர்மம் திருப்புமுனையை அடைந்துள்ளது

அமெரிக்கா சென்று, பின்னர் காணமற்போய் ஒரு மாதத்தின் பின்னர் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக வர்த்

[6ம் பக்கம் பார்க்க]

# 200 கோடி ரூபா ஒப்பந்தம்:

## உடன் ரத்துச்செய்யுமாறு கோருகிறார் 'றெனி!'

## யூரியா உரத்தொழிற்சாலை ஒப்பந்தத்தில் மோசடியாம்

(கொழும்பு)

**இருநூறுகோடி ரூபா யூரியா உரத்தொழிற்சாலை ஒப்பந்தத்தை அரசாங்கம்உடனடியாக ரத்துச்செய்யவேண்டும் என்று நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. றெனி டி மெல் கோரியுள்ளார்.**

**இதுசம்பந்தமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அமைச்சர் திரு. றெனி டி மெல், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு.ஜி. சிறில் மத்யூவைப் பணித்துள்ளார்.**

தேசிய அரசுப் பேரவையில் நேற்று உரை நிகழ்த்திய நிதி அமைச்சர் திரு. றெனி டி மெல்; யூரியா உரத்தொழிற்சாலை தொடர்பாக பல மோசடிகள் நடந்திருப்பதாகக் குற்றம் சுமத்தினர்.

### டட்லி காலம் முதல்...

"நாட்டில் உரஉற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்று இன்று நேற்றல்ல; காலம் சென்ற டட்லி அரசாங்கத்தின் காலத்திலேயே யோசிக்கப்பட்டது. இது பின்னர் பிலிப் குணவர்த்தன கைத்தொழில் அமைச்சராக இருந்தபோது மீண்டும் ஆராயப்பட்டது. சிறிமா அரசாங்கத்தில் இந்த யோசனை மீண்டும் பரிசிலனைசெய்யப்பட்டு, கேள்வி ஒப்பந்தங்கள் கோரப்பட்டன. பின்னர் பிரமாண்டமானமுறையில்,ரூ 200 கோடி செலவில் இந்த உரத்தொழிற்சாலையை இங்கு அமைக்க முன்னைய அரசினால் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இது நிறைவேறும் பட்சத்தில், நாட்டின் தேவையையும் பார்க்க மூன்று மடங்கு கூடுதலாகவே உரம் உற்பத்தியாகும். இவற்றை ஏற்றுமதி செய்யவும் முடியாது. இங்கு பயன்படுத்தவும் முடியாது" என்று கூறியநிதி. திட்டமிடல் அமைச்சர்;

### பயங்கரநஷ்டம்!

"இலங்கையில் இது நிறுவப்பட்டால், நிறுவப்பட்டமுதல் ஆண்டிலேயே அரசுக்கு 40 கோடி ரூபா நஷ்டம் ஏற்படும். இது ஆண்டுதோறும் அதிகமாகி, 1990ல் 60 கோடி நஷ்டத்தை ஏற்படுத்தும். இந்த ஒப்பந்தத்துக்காக தரகுப்பணமாக 5 கோடி ரூபா சிங்கப்பூர், டோக்கியோ, நியூயோர்க், லண்டன் ஆகிய இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

"பத்துக்கோடி ரூபா பணத்தை நஷ்டஈடாகக் கொடுத்தேனும் இந்த ஒப்பந்

(6- பக்கம் பார்க்க)

இராமிய வங்கியில

## திடீரென வெடித்த துப்பாக்கி!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் நேற்றுக் காலை நிகழ்ந்த துப்பாக்கி வெடித்த சம்பவத்தில், அதிர்ஷ்டவசமாக எவரும் காயமடையவில்லை! இது சம்பந்தமாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்!

கிராமிய வங்கியில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கடமையிலீடுபட்டிருந்த சமயம், கான்ஸ்டபிள் பாலசுப்பிரமணியத்தின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாகவும் இச்சம்பவம், அவரது கவலையீனத்தால்தான் நிகழ்ந்தது என்றும் நேற்று பொலிஸ் அதிபர் நடத்திய விசாரணையில் தெரியவந்தது.

விசாரணைகளைத்தொடர்ந்து பாலசுப்பிரமணியம் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

## "பேசாலை சம்பவங்கள் ஒரு சுவையான நாவல்"

### நல்லூர் சிவா வர்ணனை

(கொழும்பு)

"பேசாலையில் முன்னைய அரசு ஆரம்பித்து வைத்த எண்ணெய் தோண்டும் ஆராய்ச்சி வேலைகள் சரியானமுறையில் தொடர்ந்து நடைபெற வேண்டும்." என்று நல்லூர் எம். பி.திரு எம். சிவசிதம்பரம் நேற்று தேசிய அரசுப்பேரவை

[5-ம் பக்கம் பார்க்க]

## 'எதிர்க்கட்சியின் கடமை எல்லாவற்றையும் எதிர்ப்பதல்ல'

[கொழும்பு]

'எதிர்க்கட்சி என்றால் அரசாங்கம் செய்யும் சகலவற்றையும் எதிர்க்க வேண்டும் என்பது பொருளல்ல. எதிர்க்க வேண்டியனவற்றை எதிர்த்து நல்லனவற்றை ஏற்பதேஎதிர்க்கட்சியின் கொள்கையாக இருக்க வேண்டும்.'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று தேசியஅரசுப் பேரவையில் கைத்தொழில அமைச்சின் மானியம்மீதான குழுநிலை ஆய்வின்போது பேசுகையில் இன்றுகூறினர்.

### எமக்குத் திடமான கொள்கை உண்டு

'எமது கட்சி திடமான கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்து வருகிறது' என்று கூறிய அமிர்தலிங்கம், 'மூலப்பொருட்களைப்பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மூலம் புதிய கைத்தொழில்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும் சிறந்த பலாபலன்கள் இதன்மூலம் கிடைக்கும்.

'கைத்தொழில்துறையைப் பொறுத்தவரையில் சகல மாவட்டங்களின் பிரச்னைகளும் பிரச்னை தீர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சியின் சிறந்தபணிமூலம் மக்களுக்கு நற்சேவை புரிய முடியும்' என்று தெரிவித்தார்.

### கைத்தொழில் அமைச்சர் பேச்சு

கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்யூ பேசுகையில்,

நாடுமுழுவதுக்கும் பொதுவான் ஒரு கைத்தொழில் கொள்கை கடைப்பிடிக்கப் படவிருக்கிறது.

]6ம் பக்கம் பார்க்க]

## பருத்தித்துறையில் கண்ணாடித் தொழிற்சாலை நிறுவவேண்டுமென 'திரு' கோரிக்கை

(கொழும்பு)

'பருத்தித்துறையில் கண்ணாடித் தொழிற்சாலையொன்று அமைக்கப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு நேற்று தேசியஅரசுப் பேரவையில் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'கைத்தொழில்கள் இப்பொழுது பல அமைச்சுகளின் கீழ் உள்ளன. இந்த முறை நீக்கப்பட்டு எல்லாக் கைத்தொழில்களையும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

'மூலப்பொருள்களும் இயந்திரசாதனங்களும் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படலாம். உதாரணத்துக்கு 'காபன் ஸ்ரென்சில்'களை இறக்குமதி செய்ய அரசாங்கம் பன்னிரண்டரை சதவீத தீர்வை அறவிடுகிறது. ஆனால் இவற்றை இங்கு தயாரிப்பதற்குத் தேவைப்படும் பேப்பருக்கும் மைக்கும் முறையே 100 சதவீதமும் 50 சதவீதமும் இறக்குமதித் தீர்வை அறவிடப்படுகின்றது. இதனால் உள்ளூர் உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

'அரசாங்க கூட்டுத்தாபனங்களின் நிர்வாகம் பன்முகப் படுத்தப்பட வேண்டும். கூட்டுத்தாபனங்களில் நிர்வாகத்தில் அரசாங்கத்துக்கு 55 சத

[5-ம் பக்கம் பார்க்க]

## இரத்தினக்கல் கூட்டுத்தாபன மோசடிகள்: விசாரணைக்குழு நியமனம்

(கொழும்பு)

இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் சம்பந்தமாகக் கூறப்பட்ட மோசடி ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணைசெய்ய மூவர்கொண்ட பாராளுமன்றக்குழுவொன்றை நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. றெனி டி மெல் இன்று நியமித்துள்ளார்,

இக்குழுவில் நிதி. திட்டமிடல் பிரதி அமைச்சர் ஜனாப் நைனாமரிக்கார், மன்னார் எம். பி. திரு சூசைதாசன், சிலாபம் எம். பி. திரு. ஹரேந்திரகூரே ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்,

இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் இக்குழு; முன்னைய அரசின் தனி நபர் விசாரணைக்குழுவின் சிபார்சுகளையும் தொழிற்சங்கங்களின் யோசனைகளையும் ஆலோசனைக்கு எடுக்கும் என்று நிதி அமைச்சர் தெரிவித்தார். (ம)

# வரி விளம்பரம்

## கல்வி

திறமைச் சித்தி நிச்சயம் ஜி. சி. ஈ. உயர்தரம் அண்மைக்கால பரீட்சை வினுக்களும் விடைகளும் பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோககணிதம், பொருளியல் வர்த்தகமும் நிதியும், கணக்கியல், புவியியல், அரசுயியல், இந்துநாகரிகம், தமிழ், இலங்கை வரலாறு ஒவ்வொன்றும் ரூபா 19/40 தபால் செலவு ரூபா 1/ யூனைட்டெட் இன்ஸ்ரியூட்ஸ் நெல்லியடி, கரவெட்டி. 7983

திறமைச் சித்தி நிச்சயம் ஜி. ஏ. கியூ பரீட்சை அண்மைக்கால பரீட்சை வினுக்களும் விடைகளும் பொருளியல் ரூபா 29/10 தபாற் செலவு ரூபா 1/- யூனைட்டெட் இன்ஸ்ரியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 7984

## தேவை

பிரபல்யம் வாய்ந்த ரவல் சேவிஸ் ஸ்தாபனத்திற்கு ஆங்கில அறிவுடைய பெண் லிகிதர் தேவை. விண்ணப்ப முகவரி சுபா ரவல் சேவில் 11/G மொம்சக் கட்டிடம் ஸ்டான்லி ரோட் யாழ்ப்பாணம். 7986

அல்பியன், லேலன், டீசல் லோறியில் அனுபவமுள்ள மெக்கானிக் தேவை. சிவலிங்கம் மோட்டோஸ், 31, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 7985

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## சாவகச்சேரி நகரசபை

### சந்தை வளவிலுள்ள கடைகள் குத்தகைக்கான

# கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் சந்தை வளவில் உள்ள கீழ்க் காட்டப்பட்டுள்ள நான்கு கடைகளும் அவற்றின் எதிரே காட்டப்பட்டுள்ளபடியான வியாபாரம் செய்வதற்காக 15-1-78 தொடக்கம் 31-12-78 வரைக்குமான காலப்பகுதிக்கு சீல் வைத்த கேள்விகள் என்னுல் கோரப்படுகின்றன.

### கடைகளின் விபரம்

| | கடைவிபரம் | | | வியாபார விபரம் |
|---|---|---|---|---|
| 1. | என். எம். எஸ். | இல. 3 | — | கருவாட்டு வியாபாரம் |
| 2. | என். எம். எஸ். | இல. 4 | — | கருவாட்டு வியாபாரம் |
| 3. | எல். கியூ. | இல. 3 | — | களஞ்சிய அறை அல்லது பலசரக்குக் கடை |
| 4. | எல். கியூ. | இல. 4 | — | களஞ்சிய அறை அல்லது பலசரக்குக்கடை |

மேற்படி கடைகள் ஒவ்வொன்றிற்கும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/-ம், கேள்விப்பத்திரப்பணம் (மீளளிக்கப் படமாட்டாது) ரூபா 10/ ம் செலுத்தி 4-1-78-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 6-1-78 ந் திகதி பிற்பகல் 4-45 மணி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் சீல் வைக்கப்பட்டு கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் இலக்கம் குறிப்பிடப்பட்டு இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படலாம். சித்திகரமான கேள்விதாரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

எந்தவொரு காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையுமோ எவற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளருக்கு உண்டு.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
20-12-77.

7987

## விசேட ஆணையாளர் அலுவலகம் வல்வெட்டித்துறை நகரம் வல்வெட்டித்துறை

## வரியிறுப்பாளர்களுக்கு பிரதான அறிவித்தல்

1977-ம் ஆண்டு நான்காம் காந்தாயத்திற்கான ஆதனவரி இம்மாதம் 30-12-1977-ம் திகதி பிற்பகல் 12-30 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இதன்பின் செலுத்தப்படாமல் இருக்கும் வரியின் மீது பத்துவீதம் பற்றுணைச் செலவாக அறவிடப்படும்.

இதுவரையுள்ள நிலுவைகளை உடனடியாகச் செலுத்தி உங்கள் ஆதனங்களை நடுக்கட்டல், விற்பனைசெய்தல் ஆகிய விருப்பமற்ற நடவடிக்கைகளிலிருந்து தவிர்த்துக்கொள்ளவும்.

மேலும் சபையின் வெலியாத்து உத்தியோகத்தரிடம் ஆதன நிலுவைகளைச் செலுத்தும்போது சபையின் உத்தியோகப் பற்றுச்சீட்டைப்பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கோபாலசுந்தரம் கந்தசாமி
செயலாளரும்,
விசேட ஆணையாளரும்,
வல்வெட்டித்துறை நகரம்
வல்வெட்டித்துறை.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை.
19-12-1977. 7988

# சட்டத்தரணியிடம் துப்பாக்கிமுனைக் கொள்ளை

[பொலநறுவ]

சட்டத்தரணி ஒருவர் வந்த காரை வழிமறித்த 5 பேர் அடங்கிய கொள்ளைக்கோஷ்டியொன்று துப்பாக்கிமுனையில் இரு கைக்கடிகாரங்கள் உட்பட 8345 ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடித்தது;.

பொலநறுவையைச் சேர்ந்த விமலதாஸ என்பவரே பிரஸ்தாப சட்டத்தரணியாவார். [உ]

விஸ்வமடுவில்

## மேலும் 25 அகதிக் குடும்பங்கள் குடியமர்த்தப்படும்

[யாழ்ப்பாணம்]

விஸ்வமடுவில் மலையக அகதிகள் குடியேற்றத்திற்கான உதவிகளை விஸ்வமடு விவசாயிகள் அபிவிருத்திமன்றம் செய்து வருகின்றது.

வெளிநாட்டின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள நீலக் கூடாரக் கோட்டத்தை முன்னைய குடியேற்றவாசிகளான இளைஞர்களும் அப்பகுதி மக்களும் பார்வையிட்டு வருகின்றனர்.

மேலும் 25 அகதிகள் குடும்பங்களை இங்கு குடியமர்த்திவாடி அமைக்கும் முதற்பணி ஆரம்பமாகியுள்ளது.

புனர்வாழ்வுச்சபை உறுப்பினர் திரு. வி. பொன்னம்பலம் விஸ்வமடுவிற்கு நேரில் சென்று ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றார். [க-அ]

## 24ம் திகதி பட்ஜட் எதிர்ப்புக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வரவுசெலவுத் திட்டத்தை எதிர்த்து இலங்கை சீனசார்பு கம்யூனிஸ்ட்கட்சித் தொழிற் சங்கங்களின் கூட்டம் இம்மாதம் 24ம் திகதி மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு கே ஏ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் சீனசார்பு கம்யூனிஸ்ட்கட்சிப் பொதுச் செயலாளர் திரு என் சண்முகதாசன், திரு காந்தி அபயசேகரா, திரு கே செந்திவேல், திரு எம் ஏ சி இக்பால் ஆகியோர் பேசுவர். [க-அ]

## பிரயாணிகள் அவதி

[துணுக்காய்]

கிளிநொச்சி பஸ்டிப்போவினுல் நடாத்தப்படும் 90ம் இலக்க துணுக்காய்-யாழ்ப்பாணம் பஸ்சேவை மிகவும் மோசமான நிலையிலிருப்பதாக புகார்கள் தெரிவிக்கின்றன.

இப்பாதையால் ஒரேயொரு பஸ் மட்டுமே தினமும் மூன்று முறை சேவையிலீடுபட்டுவரும் போதும் இப்பஸ் திடீரெனப் பழுதடைந்துவிட்டால் பஸ் சேவையே ஸ்தம்பித்துவிடுகிறதாம். இதற்காக மாற்று பஸ் எதுவும் சேவையிலீடுபடுத்தப் படுவதில்லை.

இப்பஸ் திருத்தப்பட்டபின்னரே சேவையிலீடுபடுகிறது. இதைவிட பருத்தித்துறை-துணுக்காய் சேவையில் ஈடுபட்டிருந்த 94ம் இலக்க பஸ் சேவையும் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது.

இதனுல் இப்பகுதி குடியேற்றத்திட்டங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளும் பொதுமக்களும் போக்குவரத்துச்செய்ய பெரிதும் கஷ்டப் படுவதாகப் புகார்கள் கூறப்படுகின்றன.

இதுகுறித்து இப்பகுதிபாராளுமன்ற உறுப்பினர் திரு எக்ஸ் எம் செல்லத்தம்புவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. [மாவி-திரு]

வெளிவந்துவிட்டது
**பாலபோதினி**
அரிவரிப் புத்தகம்
வண்ணச்சித்திரப் பதிவு
பெற்றுக்கொள்ளும் இடம்
சுன்னுகம் தனலக்குமி புத்தகசாலை

எமது வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மனப்பூர்வமான நத்தார் — புதுவருட வாழ்த்துக்கள்

றிக்கோ ஹோட்டல் விசேஷ அறிவித்தல்
என்றென்றும் சுவைப்பிரியர்களின் நன்மதிப்பைப்பெற்றுவரும் றிக்கோஸ்தாபனம்
இடவசதி போதாத அசௌகரியத்தைத் தவிர்க்கு முகமாக
சுவீற்மார்ட் ஆகவும் கிறீம்ஹவுஸ் ஆகவும் மாற்றப்பட்டுள்ளதால் நாளை
(23-12-77) முதல் மதிய போசனம் மட்டுமே (கோழிப்புரியாணி) வழங்கப்படும்
வழமைபோல் ∘ கட்லட் ∘ ரோல் ∘ பற்றிஸ் ∘ பொங்மேசுவீற்ஸ் ∘ கேக்வகைகள் ∘ மஸ்கட்டுகள்
∘ ஐஸ்கிறீம் வகைகள் ∘ பாலுதா சர்பத்வகைகளுடன் கோப்பியையும் சூடாகவும் குளிராகவும் சுவைத்து மகிழலாம்
சுவீற்வகைகள் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

றிக்கோ சுவீற்மார்ட் அன் கிறீம்ஹவுஸ் Ricoh
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 464
7990

## மத்திய கிழக்கு விவகாரம்

# அன்வர் சதாத்தைச் சந்தித்தார் மோஷே தயான்

டெல்அவிவ், டிச. 21

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. மோஷே தயான் எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தைச் சந்தித்து மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்ருர். பேச்சுவார்த்தை விபரங்கள் வெளியிடப்படவில்லே.

### பெகின் யோசனே

இது இவ்வாறு இருக்க, ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரையிலும் காஸா பகுதியிலும் இருக்கும் பாலஸ்தீன அரபுக்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் யோசனே கூறியுள்ளார்

அமெரிக்காவில் ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரைச் சந்தித்த போதே திரு. பெகின் இந்த யோசனேயை வெளியிட்டார். கிழக்கு, மேற்கு ஜெருஸலங்கள் ஐக்கியமாக இருக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கும் அவர், ஜெருஸலத்தின் புனித ஸ்தலங்கள் சமய நிறுவனங்களின் சுயகட்டுப்பாட்டில் விடப்படலாம் என்றும் கூறியுள்ளார்.

தாமும், சதாத்தும் சமாதான உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டால் ஜனதிபதி திரு. கார்ட்டர் தம் இருவரையும் வாஷிங்டனுக்கு அழைக்க வேண்டும் என்றும் [உங்களோடு சமாதானம் நிலவட்டும்] உலகுக்கு அறிவிப்போம் என்றும் திரு. பெகின் கூறியிருக்கிருர். [உ]

## மேற்கு ஜெர்மன்மாஜி அதிபர் பாரதம் விஜயம்

புதுடில்லி, டிச. 21

மேற்கு ஜெர்மன் முன்னுள் அதிபர் பாரத விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று புதுடில்லி விமான நிலேயத்தில் அவரை மத்திய அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்ணண்டஸ், கைத்தொழில் மந்திரி உட்பட பல முக்கியஸ்தர்கள் வரவேற்றனர்.

மேற்கு ஜெர்மன் முன்னுள் அதிபர், பாரத ஜனதிபதி, பிரதமர் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார். (உ)

## யூகோ. உதவியுடன் பாரதம் கப்பல்கூடம் நிறுவும்

புதுடில்லி, டிச. 21

பாரதத்தில் கப்பற்கூடம் ஒன்று மிகப் பெரியளவில் நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

பாரதம், யூகோஸ்லேவியாவின் உதவியுடன் இக்கப்பற்கூடத்தை நிர்மாணிக்கும்.

இக்கப்பற்கூட நிர்மாணம் பற்றி இருநாட்டு அதிகாரிகளு [illegible] சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றனர். (உ)

## ஈழத்தின் இயற்கை எழில்; விருந்தோம்பாத பண்பு

### ரஷ்யா 'டாஸ்' பாராட்டு

மாஸ்கோ, டிச 21

'இலங்கைஉல்லாசப்பயணப் பருவம் துவங்கியுள்ளது. உலகின் பல திசைகளிலிருந்து உல்லாசப் பயணிகளே ஈர்த்திழுக்கும் 'இந்து சமுத்திரத்தின் முத்தாரமான' இலங்கைக்கு இம்முறை ஏறத்தாழ 150,000 உல்லாசப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது' என சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் கூறியுள்ளது.

'ஈடிணையற்ற இயற்கை வனப்பு, அருமை பெருமை மிக்க விலங்கினங்கள், புகழ்பூத்த புராதன கலாசார சின்னங்கள், கடும் உழைப்புள்ள மக்கள், மேம்பட்ட விருந்தோம்பற் சிறப்பு ஆகியவற்றினைக் கொண்ட இலங்கை ஆயிரக்கணக்கில் உல்லாசப் பயணிகளே ஈர்த்திருப்பது மிகவும் இயல்பானதே.

'இலங்கை வரும் உல்லாசப் பயணிகளின் தொகை அதிகரிக்கின்ற காரணத்தின் உல்லாசப் பயணத்தொழிற்றுறை மேலும் விருத்தி பெறும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. இது இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு ஒரு வகையில் துணே செய்கின்றது' என டாஸ் செய்தி ஸ்தாபனம் மேலும் கூறியுள்ளது. (உ)

## பூநகரி ஆஸ்பத்திரியின் அவல நிலே

[பூநகரி]

பூநகரி அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய வைத்திய அதிகாரியை இடமாற்றி ஆறுமாத காலத்திற்கு மேலாகியும் அவரது இடத்திற்கு ஒருவரை இதுவரை நியமிக்காதது குறித்து நோயாளிகள் கவலே தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்பொழுது பரவி வரும் ஒருவகை காச்சல் காரணமாக நாளாந்தம் நோயாளிகளின் தொகை அதிகரித்துள்ளமையால் நோயாளிகள் வார்ட்டில்தங்கிநின்றுசிகிச்சை பெற முடியாதபடி இடநெருக்கடி ஏற்பட்டுள்ளமை குறித்தும் நோயாளிகள் கவலே தெரிவிக்கின்றனர்.

சுகாதார அமைச்சு இதனே கவனத்திற்கெடுத்து கூடிய வாட்டுகளே கட்டிக்கொடுக்க ஏற்ற ஒழுங்குகளேச் செய்ய வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகின்றனர். (உ)

## இந்த அலுவலகத்திற்கு மூடுவிழா

(யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து பொறியியலாளர் அலுவலகங்கள் நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலேகள் அமைச்சர்திரு காமினி திஸநாயக்காவின் புனரமைப்பு உத்தரவின் கீழ் நான்காகக் குறைக்கப்படவுள்ளன. ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், பளே, பூநகரி ஆகிய இடங்களிலே மேற்படி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்கள் இயங்கவுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் இவை செயற்படும்.

புலோலி மந்திகையிலுள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகமே மூடப்படவுள்ளது.

இதுவரை நெடுந்தெருக்கள் அமைச்சுடன் சேர்ந்தியங்கிய நீர்ப்பாசனத் திணேக்களம் தனித்து இயங்கவுள்ளது. இதன் காரியாலயம் சாவகச்சேரியில் மட்டும் அமைந்து இயங்கும். இக் காரியாலயமும் ஜனவரி மாதம் தொடக்கம் இயங்கும். [உ]

## கொள்ளே லாப வழக்குகள்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் விலேக்கட்டுப்பாட்டை மீறியதாகக் கைது செய்யப்பட்ட வர்த்தகர்களுக்கு மல்லாகம் நீதிபதி அரசாங்க செலவு விதித்தார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. கே. சிவப்பிரகாசத்தினுல் இவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் சீனியை கூடுதலான விலேக்கு விற்றவர்களுக்கு 300 ரூபாவும், மல்லியைக் கூடுதலான விலேக்கு விற்றவர்களுக்கு 1000 ரூபாவும், பாண் கூடுதலான விலேக்கு விற்றவர்களுக்கு 250 ரூபாவும் அரசாங்க செலவாக விதிக்கப்பட்டது. [உ]


சுசி

∴ கலண்டர்கள்

∴ டயறிகள்

∴ பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

V

வடபகுதி விநியோகஸ்தர்கள்

S. P. சாமி அன் கொம்பனி

193, மின்சாரநிலேய வீதி, யாழ்ப்பாணம்.


# "கூட்டுறவின் வளர்ச்சி ஊழியரில் தங்கியுள்ளது"

(மாவிட்டபுரம்)

"கூட்டுறவு இயக்கமானது சமூகத்திற்குச் சேவைசெய்யும் அடிப்படை நோக்கத்தைக் கொண்டது. அதற்கேற்றபடி செயல்பட்டு சங்கத்தைவளர்ப்பதுடன் தனியார் வர்த்தகர்களுடன் போட்டிபோட்டு இலாபத்தை ஈட்டுவதில் சங்கப் பணியாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். அல்லது கூட்டுறவுச்சங்கங்களுக்கு மூடுவிழா செய்யவேண்டிய நிலே தான் ஏற்படும்".

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள், கிளே முகாமையாளர்கள், விற்பனேயாளர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்ட கூட்டுறவு இயக்கம் பற்றிய கருத்தரங்கில் கலந்துரையாற்றிய ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைச் செயலாளர் திரு. க. கணேசலிங்கம் கூறினுர்.

"வருங்காலத்தில் கூட்டுறவு இயக்கத்தை சிதைவுருமல் பாதுகாப்பது எப்படி?," என்பது குறித்து ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையால் ஒழுங்கு செய்யப்பட்டு சங்க மண்டபத்தில் நடந்த இக்கருத்தரங்குக்கு சங்கப்பொது முகாமையாளர் திரு. சி. நவரத்தினம் தலேமை வகித்தார்.

தேசிய கூட்டுறவுச்சபை செயலாளர் திரு. கணேசலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"கூட்டுறவு இயக்கம் புனிதத்தன்மையுடையதாகஇருக்க வேண்டும். சங்க ஊழியர்கள் தங்கள் கடமையில் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும். அவர்களது திறமை வாய்த்த சேவையில் தான் சங்கங்களது வளர்ச்சிதங்கியுள்ளது. சங்கம் நஷ்டமடைந்தால் அது சங்கப்பணியாளர்களேயும் வெகுவாகத் தாக்குமாதலால் அவர்கள் சங்கத்தை வளர்க்கப்பாடுபட வேண்டும்" என்ருர்.

பொல்கொல்லே கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி விரிவுரையாளர் திரு. இ. மு. நாகலிங்கம் பேசுகையில் "ஊழியர்கள் நேர்மை, விசுவாசம், கண்ணியம் நிறைந்தவர்களாக இருந்தால்தான் எதிர்காலத்தில் கூட்டுறவு இயக்கம் நிலேத்து நிற்கமுடியும்" என்ருர்.

பொல்கொல்லே கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி விரிவுரையாளர் திரு. நவரத்தினசிங்கம் உட்படப் பலர் கருத்துரை வழங்கினர்.

ஊழியர்களே எதிர்நோக்கும் பிரச்சனேகள் பற்றியும். அவற்றைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இக்கருத்தரங்கில் விரிவாக ஆராயப்பட்டது. (உ)

வலி. மேற்கில்

## விதை கிழங்குத் திருடர்: விவசாயிகள் உஷார்

[சங்கானே]

விதை உருளேக்கிழங்கு நாட்டியதினமே களவுபோன சம்பவம் ஒன்று இரவுவேளே சண்டிலிப்பாய் தொட்டிலடியில் நடைபெற்றுள்ளது.

தொட்டிலடியைச் சேர்ந்த சிவம் என்பவர் தொல்புரம் விளேபொருக்கக் குழுவினர் விநியோகம் செய்த விதை கிழங்கைப் பெற்றுச்சென்று அதே தினம் நாட்டினுராம். மறுநாள்காலே தோட்டத்திற்குச்சென்றபோது கிழங்கு நாட்டிய இடங்கள் தோண்டப்பட்டு விதை கிழங்குகள் யாவும் களவாடப்பட்டிருந்தனவாம்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள்கூட்டுச் சேர்ந்து இரவு வேளேகளில் தோட்டங்களில் காவல்புரிந்து வருகின்றனர். [உ]

## வர்த்தகருக்கு அபராதம்

[நெல்லியடி]

ஒரு முத்தல் மல்லியின் 1 சதம் கொள்ளே லாபம் அடித்த பருத்தித்துறையைச் சேர்ந்த குணரட்ணம் கமலேஸ்வரன் என்னும் வர்த்தகருக்கு பருத்தித்துறை நீதவான் திரு. த. கெங்காதரன் 50 ரூபா அபராதம் விதித்தார்.

மேற்படி வர்த்தகரை பருத்தித்துறைப் பொலிசார் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். [உ]

"ஐந்து நாள் வேலேத்திட்டம்:

# காகித ஆலேயிலும் செயற்படுத்துக"

[கொழும்பு]

'அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவந்த ஐந்துநாள் வேலேத்திட்டம் பல கூட்டுத்தாபனங்களில் அமுல்படுத்தப்படாதது கவலேதருகிறது. இத்திட்டத்தைக் காகித ஆலேயிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்.'

இவ்வாறு அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின் காகித ஆலேக்கிளேயின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று முகாமையாளரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

அண்மையில் சேவை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்த அமைய ஊழியர்கள் அனேவரையும் 1978 ஜனவரிமுதல் நிரந்தர சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உட்பட மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. [உ]

## அனுதாபம்

[நெல்லியடி]

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றமும் மாஜிஸ்திரேட் நீதிமன்றமும் சட்டத்தரணி செல்லேயா பொன்னுத்துரை ஐயரின் மறைவுகுறித்து அனுதாபம் தெரிவித்துள்ளது.

# இறையுணர்வில் திளைப்பதற்கு இசையும், நாடகமும் பெருந்துணையாம்

தமிழ்மொழி தொன்மையும் சிறப்பும் உடையது. பழமையான இலக்கண இலக்கியங்களையும் உடையது. மனித வாழ்விற்கு அடிப்படையான ஒழுக்கத்தையும், சமய உணர்வையும் இரு கண்ணெனப் போற்றி வளர்த்த பெருமையுடையது.

நம் சமயநூல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம் ஒன்று தோத்திரம், இரண்டு சாஸ்திரம், மூன்று புராணம். தோத்திர நூல்களுள் திருமுறைகள் சிறப்பாகக் குறிக்கத்தக்கனவாகும். திருமுறைகள் அருளியவர்களில் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரையும் சமயகுரவர் என அழைப்பர். இவர்கள் நால்வரும் இன்றேல் நம் சைவசமயம் இத்துணைக் கட்டுக்கோப்புடனும், பொலிவுடனும் வளர்ந்திருக்கவியலாது என்பது ஒருதலை. இந்நால்வரும் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்கள்தோறும் சென்று தமிழோடு இசைபாடி சமயத்தையும் சமூதாயத்தையும் வளர்த்தவர்கள் ஆவர். முத்தமிழுள் இயற்றமிழ் நீங்கலாக ஏனைய இரு தமிழும் காமத்தை விளைவிக்கும் எனக் கூறிய கருத்தை மறுத்து இறையுணர்வில் திளைப்பதற்கு இசையும், நாடகமும் பெருந்துணையாகும் எனக் கூறிய பெருமை இவர்களையே சாரும்;

இறைவனை வழிபடுவதற்குரிய மந்திரம் ஐந்தெழுத்திலாயது. இதனைப் பஞ்சாட்சரம் என்பர். அதைப் போன்றே இந்நால்வருடைய திருப்பெயர்களும் திருவைந்தெழுத்தெனக் கருதப்பெறும் பெருமையுடையது. ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நம்பியாரூரர், மணிவாசகர் என்னும் திருப்பெயர்களுள் மெய்யெழுத்தை நீக்கின் ஒவ்வொன்றும் திருவைந்தெழுத்தாகும். இவற்றைப் பத்த பஞ்சாட்சரம் என்பர். இந்நால்வரும் அருளிய திருமுறைகளே முதல் எட்டுத் திருமுறைகளாகும் இவற்றுள் எட்டாம் திருமுறை திருவாதிரை நாளில் பெரிதும் சிந்தித்தற்குரியதாகும்.

திருவை அடையும் முறையைக் கூறுவது திருமுறை. இந்தத் 'திரு' என்பது செல்வம், இலக்குமி. பெருமைக்குரிய சொல் எனப்படும் முறையில் வந்ததன்று. 'சிவமேபெறும் திருஎய்திற்றிலேன்' என்பது திருவாசகம். எனவே சிவத்தைப் பெறும் திருஎதுவோ அதுவே திரு என்பதன் பொருளாகும். திருவாசகம், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை எனப்படும். இத்திருமுறை 'நமச்சிவாய வாழ்க' எனத் தொடங்குகிறது. திருக்கோவையாரின் இறுதிப் பாடல் 'உயிர்க்கு ஊதியமே' என நிறைவு பெறுகிறது. இவ்விரு குறிப்பையும் இணைத்துக் காணின் உயிர்பெற வேண்டிய ஊதியம் திருவைந்தெழுத்தேயாகும் என்பது விளங்கும்.

திருவாசகத்தின் உயிர்ப்பு நன்றியுணர்வேயாகும். இறைவன் நரியைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்து பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சது ஏற்றிய பெருந்தகைமையை அடிகள், விளைந்தும், இழைந்தும், குழைந்தும் உருகிய பாடல்களே திருவாசகமாகும். திருவாசகம் பயிலுந்தோறும் பயிலுந்தோறும் உயிர்க்கு இனிமையும் உய்வும் அளிக்கும். கல்லைப் பிசைந்து கனியாக்கும் கனிவுடையது திருவாசகம். அரிய பொருளைப் பெண்களின் எளிய விளையாட்டுவகையால் அறிவுறுத்திய பெருமை திருவாசகத்திற்கே உண்டு. திருவுந்தியார், திருவெம்பாவை, திருச்சாழல், திருஅம்மானை, திருப்பொன்னூஞ்சல் முதலிய திருப்பதிகங்கள் விளையாட்டு வகையால் நோக்குவோர்க்குஞானக் கருவூலமுமாகி விளங்குகின்றன. சன்மார்க்க நெறியில் அடிகள் நின்றவர் என்பதற்கேற்ப திருக்கோவையூர் அமைந்து விளங்குகின்றது. முன்னும் பின்னும் அடைமொழியோடு கூறி விளங்கும் இவ்வருமை நூல் உள்ளுந்தோறும் உயிரை மகிழ்விப்பதாகும்.

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி
(அண்ணாமலைப்பல்கலைக்கழகம்)

[காரைநகர் மணிவாசகர் சபை ஆதரவில் ஈழத்துச்சிதம்பரத்தில் நேற்று நடைபெற்ற இருபத்துமூன்றாவது மணிவாசகர்விழாவை ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய தலைமைப் பேருரையின் சுருக்கம்]

## இராஜகோபுரம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்மன் தேவஸ்தான இராஜகோபுர வேலையை அண்மையில் புதிய பரிபாலன சபையின் ஆதீன கர்த்தா தலைமையில் சிவநெறிக் காவலர் திரு. க. கனகராஜா ஆரம்பித்துவைத்தார்.

இக்கோபுரவேலை கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சிற்பக் கலைஞர் திரு. சோமசுந்தரம் ஸ்தபதி தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

பலலட்சக்கணக்கான ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பணிக்கு அடியார்களிடமிருந்து அன்பளிப்புகளை தருமகர்த்தா சபையினர் எதிர்பார்க்கின்றனர். (கா)

## சொந்த இடங்களுக்கு இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

கடந்த ஆகஸ்ட் மாதக் கலவரங்களின்போது வெளி மாகாணங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மருந்து கலவையாளர்களுக்கு அவர்களின் சொந்தப் பிரதேசங்களில் சுகாதார அமைச்சு இடமாற்றங்களை வழங்கியுள்ளது.

இவர்களின் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் கருத்திற்கொண்டு நிரந்தரமாக சிங்களப் பிரதேசங்களிலிருந்து தமிழ்ப்பிரதேசங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவேண்டும் என்றும் அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். மாவட்டக் கிளை தாய்ச்சங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதற்கிணங்க தாய்ச்சங்கம் சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்த இடமாற்றங்களை நிரந்தரமாக எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கியுள்ளது. [உ]

## முருகன் ஆலயம் புதுமெருகு பெறும்

[மாவிட்டபுரம்]

பிரசித்தி பெற்ற மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் புனரமைப்புச் செய்யப்பட்டு புதுமெருகுடன் கூடியதாக அமைக்கப்படுவதற்காக இக்கோவில் மூர்த்திகள் யாவும் இம்மாதம் 14-ந் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட உள்ளது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றுள் விசேடம் பெற்ற இவ்வாலயத்தின் சில பகுதிகள் பழுதடைந்ததையடுத்து ஆலயம் முழுவதையும் புனரமைப்பதற்காக இந்த பாலஸ்தாபனம் நடைபெற உள்ளது.

இவ்வாலயத்தை புனரமைத்து எதிர்வரும் தை மாதத்தில் மகா கும்பாபிஷேகத்தை நடத்த ஆலய தர்மகர்த்தா திரு. சி. கணபதிப்பிள்ளை வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளார். [உ]



ராணி தினசரி 10-30, 2.30, 6-00, 9.30.
(யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ் நடித்த
விவசாயி
(புதிய பிரதி)

11-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
யாழ்நகர் ஜெமினி, விஜயகுமாரி, கே. ஆர். விஜயா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.
தந்தை செல்வாவின் இறுதியாத்திரை வெகு விரைவில் இப்படத்துடன் காண்பிக்கப்படும்.

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி - சாவித்திரி (இருவேடங்களில்)
ரங்கராவ், M R ராதா
காத்திருந்த கண்கள்
(புதிய பிரதி)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
Jack Palance
in
THE Mc MASTERS
(Action Films Color)

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே பாலசந்தர்

ஸ்ரீதரில் நாளை முதல்
(யாழ்ப்பாணம்) நத்தார் புதுவருட வெளியீடு
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ முத்துராமன் ★ ஜெயசித்திரா
★ சுந்தரராஜன் ★ ஸ்ரீகாந்த்
வி. கே. ராமசாமி, தேங்காய் சீனிவாசன்
குமாரி பத்மினி நடித்த
அவள் ஒரு தொடர்கதை, பெண் தெய்வம் வரிசையில் மற்றுமோர் வெற்றிப் படைப்பு.
இன்ஸ்பெக்டர் மனைவி
திரைக்கதை, வசனம் டைரக்ஷன் -
ஏ.சி.திருலோகசந்தர் எம். ஏ
இசை, இன்னிசைவேந்தர்கள்
சங்கர் - கணேஷ்

இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் ஜெயசுதா
பந்தாட்டம்
(புதிய பிரதி)

## லட்சார்ச்சனை

[சுழிபுரம்]

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அரங்கநாதருக்கு மார்கழி முதல் தொடர்ந்து முப்பது தினங்களுக்கு விசேஷ லட்சார்ச்சனை நடைபெற்று வருகின்றது.

## அரியாலை யூதாததேயு ஆலயம்

[யாழ்ப்பாணம்]

அரியாலை புனித யூதாததேயு ஆலயப் புதிய கட்டிடம் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இக்கட்டிடத்திற்கான நிதியை அதிர்ஷ்டலாபச்சீட்டு மூலமும் திரட்டத் திட்டமிட்டுள்ளதாகவும் பரிசுப் பொருள்களை வழங்குவதற்குப் பலர் முன்வந்துள்ளதாகவும் இவ்வாலய அமைப்பாளர்களில் ஒருவர் தெரிவித்தார். (அ)

## நாளை ஆண்டுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை மனித தார்மிக இயக்கத்தின் இரண்டாவது ஆண்டுக்கூட்டம் நாளை யாழ். சட்ட நிலைய விரிவுரை மண்டபத்தில் இயக்கத் தலைவர் திரு. ஆ. விவேகானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

நடப்புவருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும். [கா-உ]

## கோட்டைவாசி கோரக்கொலை

(கொழும்பு)

கோட்டையைச் சேர்ந்த நாணயக்கார (வயது 18) என்னும் வாலிபர் கோரமாகக் கொலைசெய்யப்பட்டார்.

இக்கொலை தொடர்பாக பெரேரா, 'ருலஹாமி' என்ற இருவர் தேடப்படுகின்றனர். [உ]

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
ஜெமினி - சாவித்திரி
பாக்கிய தேவதை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி, 2-30, 6-30, 9-30
மனிதரில் மாணிக்கம்

RIO Daily 4 Shows
(Jaffna)
PRASURA OF THE AZATICS

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
முத்தான முத்தல்லவோ

விடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

சமூக முன்னேற்ற மன்றம்

## கூட்டணி எம். பிக்களுக்கு பாராட்டு

[கொழும்பு]

பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச்சங்க ஊழியர் சார்பாகவும் சீவல்தொழிலாளர்சார்பாகவும் தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி.க்கள் நிதியமைச்சர் திரு. றொனி டி மெல்லைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது குறித்து கொழும்பு சமூகமுன்னேற்ற மன்றம் நன்றிதெரிவித்துள்ளது.

பனம்கட்டிக்கு உத்தரவாத விலை நிர்ணயிப்பதன்மூலம் பனம்பொருள் உற்பத்தித் தொழிலுக்கு அரசாங்கம் ஊக்கமளிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் மன்றம் தெரிவித்துள்ளது.

அமைச்சருடனான பேச்சுவார்த்தையின்போது பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட உடுப்பிட்டி எம். பி.க்கு சமாஜ ஊழியர்களும் சீவல் தொழிலாளர்களும் பெரிதும் கடமைப்பட்டவர்களாவர் என்றும் மன்றம் குறிப்பிட்டுள்ளது. [உ

## "சமூகப்பிரச்னைகளை ஆன்மீக ரீதியில் அணுகவேண்டும்"

[கொழும்பு]

"தனித் தனியே வழிபாடு செய்யப் பழகிக்கொள்வோர் ஒன்றுசேர்ந்து கூட்டாக வழிபடவும் நல்ல கருத்துக்களை வளர்க்கவும் பழகிக்கொள்ள வேண்டும். இதனால் பல சமூகப் பிரச்னைகள் தீர வழி பிறக்கும். சமூக நன்மை தீமைகளை ஆன்மீகச் சூழலில் சிந்திக்கும்போது அவற்றைத் தீர்ப்பது மிகவும் சுலபமாகும்"

இவ்வாறு கொழும்பு பௌராணிகர் குழுவைச் சேர்ந்த திரு. ம. நமசிவாயம் கொழும்பு செட்டியார்தெருவில் நடைபெற்ற விநாயகர் புராண சற்சங்க 21 நாள் பூர்த்தி வைபவத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "சமய உண்மைகளையும் தத்துவக் கருத்துக்களையும் புராணங்கள் கதைவடிவில் கற்போர் மனதில் பயன் தரும் வகையில் விளக்குகின்றன.

இதனால் தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் போன்ற பேரறிஞர்கள் நாவல்களைப் படித்து நேரத்தை வீணாக்காமல் புராண சமய இலக்கியங்களை நாம் கற்று வாழ்க்கையைப் பண்படுத்தல் வேண்டுமென வலியுறுத்தினார்கள்" என்றார்.

## இடமாற்றங்கள்

(நெல்லியடி)

நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையில் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்த திரு. எஸ். ராஜேந்திரா எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் பரந்தன் மக்கள் வங்கிக் கிளைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். [உ]

∴ ∴ ∴

பருத்தித்துறை பொறியியல் அதிகாரியாகப் பணிபுரிந்த திரு. எஸ். பாலேந்திரா இம்மாதம் தொடக்கம் பிராந்திய பொறியியலாளர் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். [உ]

## நீதிபதிக்குப் பாராட்டு

[மாவிட்டபுரம்]

மல்லாகம் மாவட்ட நீதிபதியாக இருந்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் பெற்றுச்செல்லும் திரு. எம். டி. யேசுரத்தினத்திற்கு மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் இம்மாதம் 24-ந் திகதி பிரியாவிடை விழாவையும் தேநீர் விருந்துபசாரத்தையும் மல்லாகம் நீதிமன்ற மண்டபத்தில் நடத்த இருக்கின்றனர். (உ)

## சனி, ஞாயிறில் வியாபாரம் நடக்கும்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வர்த்தக நிலையங்கள் யாவற்றையும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் திறந்து வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் மூடும் புதிய நடைமுறைக்கு வரஉள்ளது.

சங்க இயக்குநர் சபை இத்தீர்மானத்தை அங்கீகாரத்திற்காக கூட்டுறவு இலாகாவுக்கு அனுப்பிவைத்துள்ளது. [அ]

## கிணற்றில் பெண் சடலம்

(நெல்லியடி)

பருத்தித்துறை தம்பசிட்டி கல்லூரி வீதியிலுள்ள கிணறு ஒன்றில் பெண்சடலம் ஒன்று மிதக்கக்காணப்பட்டது.

65 வயது மதிக்கத்தக்க இப்பெண்ணின் மரணம்குறித்து விசாரணை நடைபெறுகிறது.

## பேசாலை—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் பேசுகையில் கூறினார்.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் பேசாலையில் நிகழ்ந்த எண்ணை அகழ்வுச் சம்பவங்கள் ஒரு ருசிகரமான நாவலைப்போன்றது என்று வர்ணித்த திரு. சிவசிதம்பரம்;

"பெட்ரோல் ஆராய்ச்சியை சரியான முறையில் நடத்த அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். எண்ணெய் ஆராய்ச்சியாளர்கள் சோவியத் யூனியனில் மட்டும்தான் இருக்கிறார்கள் என்பதல்ல வேறு நாடுகளிலும் இருக்கின்றார்கள். இவர்களைப் பயன்படுத்தி எண்ணை அகழ்வு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்" என்றுகேட்டுக்கொண்டார். [ம]

## பருத்தித்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதமும் பொதுமக்களுக்கு 30 வீதமும் ஊழியர்களுக்கு 15சதவீதமும் பங்கு இருக்க வேண்டும். இந்த நிலை ஏற்படுமானால் ஊழல்கள் தலைதூக்க இடமிருக்காது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கைத்தொழிற் பயிற்சிப் பாடசாலைகள் அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். [ம]

### மணிவாக்கு

நாமே அசுத்தமாக வாழ்ந்து கொண்டு மற்றவர்களைச் சுத்தமாக வாழுங்களெனச் சொல்வது எவ்வளவு தவறான தாகும்.

— காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## தனியார் பாலர் பாடசாலை ஆசிரியைகள்

தனியார் நடத்தும் பாலர் பாடசாலைகள் அனைத்தையும் மூடிவிடுவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது.

தனியார் பாடசாலைகளில் ஏழைப் பிள்ளைகளுக்கு கல்வி கற்கும் வசதி கிடைப்பதில்லையென்றும், ஆகவேதான் தனியார்துறையினரின் பாலர் பாடசாலைகளை மூடிவிட்டு நாட்டில் உள்ள சகல பிள்ளைகளும் ஒரே மாதிரியான கல்வியைப் பெறுமுகமாக அரசாங்கப் பாடசாலைகளில் கல்விகற்கும் திட்டத்தை அமுல் படுத்தவுள்ளது என்றும் பிரதிக் கல்வி அமைச்சர் திரு. லயனல் ஜயதிலகா கூறியிருக்கிறார்.

தனியார் நடத்தும் பாலர் பாடசாலைகளில் ஏழைப் பிள்ளைகளுக்குப் படிக்கும் வசதி கிடைப்பதில்லையென்பதை ஓரளவுக்குத்தான் ஏற்றுக்கொள்ள முடியும்.

ஏனென்றால் வடபகுதியில் வாழும் ஏழைப்பிள்ளைகளையே கொண்ட பல தனியார் பாலர் பாடசாலைகள் நடைபெற்றுவருவதை நாம் அறிவோம்.

வருமானத்தையே நோக்கமாகக் கொண்டு நடத்தப்படும் சில பாலர்பாடசாலைகளில் வேண்டுமானால், வசதி படைத்தவர்களின் பிள்ளைகளுக்காக இடம்கிடைக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளலாம்.

இம்மாதிரி பாலர் பாடசாலைகளில் குறிப்பிட்ட அளவில் 'டொனேஷன்' அல்லது வேறுவகையில் கட்டணம் செலுத்தப்பட்டாலே பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஆனால் வசதியற்ற பிள்ளைகளுக்காக நடைபெறும் பாலர் பாடசாலைகள் சேவையின் அடிப்படையிலும் படித்த இளம்பிள்ளைகளுக்கு தொழில்வாய்ப்பை அளிக்கும் நோக்குடனுமே நடைபெறுகின்றன.

இந்தப் பாடசாலைகளில் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்குப் போதியளவு வருமானம் கிடைப்பதில்லை. மிகவும் சிறு அளவிலான வேதனத்தையே இவர்கள் பெறுகின்றனர்.

சிலரின் ஜீவனோபாயமே இதில்தான் தங்கியிருக்கின்றது.

பாடசாலைகளில் சிறுவர்களைச் சேர்க்கும் வயதினைக் குறைக்க அரசு முடிவுசெய்திருப்பதினால் பாலர்பாடசாலைகளுக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடும் நிலை ஏற்படும்போது தனியாரால் நடத்தப்படும் இப்பாடசாலைகள் அனைத்தையும் அரசு மூடிவிடுமானால் இவைகளையே நம்பியிருக்கும் ஆசிரியர்களின் நிலை என்ன ஆகும்.

எனவேதான் தனியார் நடத்தும் பாலர் பாடசாலைகளை மூடும்போது அப்பாடசாலைகளில் கற்பித்துவரும் ஆசிரியர்களில் தகுதியும் திறமையும் உள்ள அனைவருக்கும் வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

## ஜி.ஜி.யின் அஸ்தியுடன் குமார் இந்தியா பயணம்

(யாழ்ப்பாணம்)

அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஸ்தியை இந்தியாவிலுள்ள புண்ணியஸ்தலங்களில் கரைப்பதற்காக அவரது புதல்வர் திரு. குமார் பொன்னம்பலம் இன்று கொண்டு செல்லவிருக்கின்றார்.

இந்தியாவில் 4 தினங்கள் தங்கி புண்ணிய ஸ்தலங்களில் தந்தையின் அஸ்தியைக் கரைத்தபின் நாடுதிரும்புவார்.

தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் சமயம், அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வெண்கலச்சிலை வடிப்பதற்கான ஆலோசனை செய்வதுடன் சிற்பி ஒருவரை இங்கு வரவழைப்பதற்கான ஏற்பாட்டையும் திரு. குமார் பொன்னம்பலம் செய்யவிருக்கிறார். [ச]

## 'இ. போ. ச. அதிகாரிகள் பிரயாணிகளின் கஷ்டத்தை நேரில் பார்க்கவேண்டும்''

[எழுதுமட்டுவாள்]

''வடபகுதி பஸ்சேவை சீர்கேட்டைப் போக்குவரத்து அமைச்சர் நேரில் வந்து பார்வையிடவேண்டும். பிரயாணிகள் படும் கஷ்டத்தை நேரில் அவர் பார்த்தால்தான் பஸ் சேவை இங்கு சீராகும்'.'

தென்மராட்சி கிழக்கு பிரயாணிகள் சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. எஸ். எம். கமலநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

கொடிகாமத்தில் நடந்த இக்கூட்டத்தில் திரு. கமலநாதன் மேலும் பேசுகையில், இ. போ. ச. உயர் அதிகாரிகள் நாள்முழுவதும் காரியாலயத்திலேயே நேரத்தைச் செலவிடாமல், ஒவ்வொரு கிராமத்திற்கும் நேரில் சென்று பிரயாணிகள் படும் கஷ்டத்தைப் பார்வையிடுவதன் மூலமே சிறந்தசேவை வழங்கலாம் என்றும் கூறினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் செல்லும் பஸ்களில் கச்சேரி. மாம்பழம்சந்தியிருந்து அரியாலை பிரயாணிகளை ஏற்றக்கூடாதென்றும், அவர்களுக்குப் புறம்பான சேவைகள் இருப்பதால் கொடிகாமம்செல்லும் பஸ்களில் நாவற்குழிக்கு அப்பாற்பட்ட பிரயாணிகளை மட்டுமே ஏற்றவேண்டும் என்றும் யாழ். டிப்போ அத்தியட்சகரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேறியது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் செல்லும் பஸ்களில் சிலவற்றை எழுதுமட்டுவாள்வரை நீடிக்கவேண்டும் எனக்கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. யாழ். இ. போ. ச, அத்தியட்சகரை சங்க தூதுக்குழு சந்தித்துப் பேசுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

சங்கத் தலைவராக திரு. கா. யோகநாதனும், செயலாளராக திரு. க, கணபதிப்பிள்ளையும், தனாதிகாரியாக திரு. எஸ். எம், கமலநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

9 கமிட்டி உறுப்பினரும் தெரிவாகினர். [க-அ]

## ஆஸி. வெற்றி!

பேர்க், டிச. 21

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட்டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றுள்ளது.

ஸ்கோர் விபரம்:

முதல் இன்னிங்ஸ் இந்தியா-402 ஆஸ்திரேலியா - 394. இரண்டாவது இன்னிங்ஸ் இந்தியா-330 [9 விக்கட்டுகள்நஷ்டத்திற்கு] ஆஸ்திரேலியா-339 [8 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு.]

## ஏரியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தகத்துறைத் தலைமைப் பேராசிரியர் ராமதாஸ், சிறந்த நீச்சல் வீரர் என்று தெரிவிக்கப்பட்டது. சென்னைப்பல்கலைக்கழகத்தில், வர்த்தகக் கல்வியைப் புதுமைப்படுத்தியதில் இவர் சிறப்பாகப் பணியாற்றியவர்.

## நேற்று அதிகாலை யாழ்.நகரில் சைக்கிளில் சென்றவர் தாக்கப்பட்டார்! கத்திமுனையில் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலை முடிவடைந்து சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த ஊழியர் ஒருவர் நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் இருநபர்களால் தாக்கப்பட்டு, கத்திமுனையில் அவரது சைக்கிள் அபகரிக்கப்பட்டுள்ளது! இச்சம்பவம் பலாலி-நாவலர் வீதி சந்திக்கு அருகாமையிலுள்ள மதகடியில் நிகழ்ந்தது.

பாதிக்கப்பட்டவரான சின்னையா பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில்; வேலை முடிந்து தாம் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இலுப்பையடிச்சந்திக்கு அருகில் திடீரெனத் தோன்றிய இருவர் தம்து சைக்கிளை பின்புறமாக இழுத்து நிறுத்தியதாகவும், இதனைத் தொடர்ந்து கடுமையாகத்தாம் தாக்கப்பட்டதாகவும், 'ஷேர்ட்' பாக்கெட்டிலிருந்த பணத்தைப் பறித்துக்கொண்ட அவர்கள் சைக்கிளையும் அபகரிக்கமுயன்றபோது தாம் தடுக்கவே, தமது நெஞ்சுக்கு நேரே கத்தியைவைத்து பயமுறுத்தினரென்றும்பின்னர் சைக்கிளை அபகரித்துச் சென்றுவிட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸார் உடனடியாக தேடுதல் வேலையை ஆரம்பித்து, சந்தேக நபர்கள்மீது பரவலான 'வலை'யை விரித்துள்ளனர்.

## 200 கோடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தத்தை உடனடியாக அரசு ரத்துச்செய்யவேண்டும். இப்படியான நஷ்டம் எதிர்காலத்தில் நிகழாத வண்ணம் புதிய நகல் சட்டம் விரைவில் பேரவையில் சமர்ப்பிக்கப்படும். கூட்டுஸ்தாபனங்கள் மூலம் செய்யப்படும் எந்த ஒப்பந்தத்துக்கும், அந்த கூட்டுஸ்தாபன தலைவர்தான் இனிமேல் பொறுப்பெடுக்க வேண்டும். இதனடிப்படையில் தான் சட்டம் இயற்றப்படுகிறது'' என்றும் அமைச்சர் தெரிவித்தார். ம)

## சனசமூகநிலைய கொடிவாரம்

(யாழ்ப்பாணம்)

வண். வட கிழக்கு சனசமூக நிலைய முன்னேற்ற நிதிக்காக மேற்படி நிலையத்தினர் கொடிவாரமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இம்மாதம் 27-ம் திகதி வரை இடம்பெறும் இக்கொடிவாரத்தின்போது, இயன்றநிதி உதவியை வழங்கி கொடிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நிலையத்தலைவர் க. ராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நிவாரண உதவி வழங்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின்போது யாழ். நகரில் எரிக்கப்பட்ட யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு நிவாரணப்பணமாக 2 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண எம். பி. திரு. வே. யோகேஸ்வரனும் கோப்பாய் எம். பி. திரு கதிரவேலுப்பிள்ளையும் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே இந்நிதி இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (கா

யாழ்ப்பாணமாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வரையுள்ளது]

### வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

மேற்படி சங்கத்தில் சேர்ந்துள்ள வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது.

முடிவு திகதி: 27-12-'77.

மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

74/3 அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1977 டிசம்பர் 21. 7992

## பேரவையில் சிந்தியவை

அமிர்: கைத்தொழிலை அபிவிருத்திசெய்யும்போது அதில் பாகுபாடு இருக்கக்கூடாது. முழு நாட்டினது அபிவிருத்தியையும் கவனத்தில்கொண்டு செயல்படவேண்டும்,

சிறில்மத்யூ; பிரிவினைக்கோரிக்கையை நீங்கள் கைவிட்டால் தேசிய ரீதியில் இதனை நிறைவேற்றமுடியும்.

அமிர்: நீங்கள் தரப்போகும் 'புடிங்'கில்தான் எல்லாம்தங்கியுள்ளது.

சிறில்மத்யூ: நாம் உங்களுக்கு சுவையான 'புடிங்'கைத் தரப்போகின்றோம். அதனைத் துண்டாக்கிவிடாதீர்கள்.

எம். சிவசிதம்பரம்: துண்டாக்காமல் எப்படி அதனைச் சாப்பிடுவது?

சிறில் மத்யூ: நீங்கள் அதனைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

அமிர்: அப்படியானல் அதனைக் காட்சிப்பொருளாக வைக்க வேண்டியதுதான்

சிறில்மத்யூ: உங்களுக்கு வாக்களிக்காதவர்களுக்கு நீங்கள் வேலைவாய்ப்பு வழங்குகிறீர்கள் இல்லை என்று திரு. குமார் பொன்னம்பலம் எனக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

எம். சிவசிதம்பரம்: எங்களுக்கு வாக்களிக்காதவர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லையே!

திரு. செல்லத்தம்பு: கால்நடைப்பண்ணையொன்று வடக்கே அமைக்கப்பட வேண்டும். இதன்மூலம்பசளைப்பிரச்னையும் தீரும். அது மட்டுமின்றி காளைகளைத் தேடி அலைய வேண்டியதும் குறையும்.

செல்லத்தம்பு: வன்னிப்பகுதி மாடுகளுக்கு நிக்கவரெட்டியாவிலிருந்து காளைகளைக் கொண்டுவர வேண்டியுள்ளது. கஷ்டப்பட்டு காளைகளைக் கொண்டுவந்தாலும் பிரயோசனமில்லை. அவற்றை வன்னி பசுமாடுகள் விரட்டியடிக்கின்றன.

சபாநாயகர்: இதிலும் மொழிப்பிரச்னையா?

நிஸங்கா விஜயரத்ன: நல்ல காளைகள் நுவரெலியா மஸ்கெலியாவிலும் இருக்கின்றன.

சிறில்மத்யூ: எங்களுக்கும் இதே நிலைதான்.

எம்: சிவசிதம்பரம்: துண்டு முறையில் வேலைவழங்கும் திட்டத்தை முற்றாக ஒழித்தால் நல்லது. [ம]

## எதிர்க்கட்சி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எந்த ஒரு மாகாணத்திற்கும் விசேஷ கவனம் செலுத்தப்படமாட்டாது'' என்றார். (ம)

## 'ஈழநாடு' தினக்குறிப்பு 1978

அடுத்த வாரம் முதல் விற்பனையாகும்

விலை:- ரூபா 4-50 சதம்

வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

தொடர்பு கொள்ளவும்:-

கலாநிலையப் பதிப்பகம்
303, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7707

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.